

2020 ஆம் ஆண்டு குடியுரிமை திருத்த சட்ட மசோதாவுக்கு எதிராக கும்பகோணம் பகுதியில் அப்போதைய மாவட்டச் செயலாளரும், தற்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சி.பி.ஐ.எம். மாவட்டச் செயலாளர் சின்னை பாண்டியன், வி.சி.க. தமிழருவி, மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி நிர்வாகிகள் முகமது இப்ராஹிம், சல்லி நசீர், சிக்கந்தர் அலி உள்ளிட்டோர் மீது கும்பகோணம் கிழக்கு காவல் துறை வழக்கு பதிவு செய்து மேற்படி வழக்கு தஞ்சாவூர் எம்.பி. எம்.எல்.ஏ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது இவ்வழக்கை விசாரித்த நீதிபதி கனிமொழி அவர்கள் வழக்கை விசாரணை செய்து அனைவரையும் விடுதலை செய்தார். இவ்வழக்கில் வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், பா.விஜயகுமார், ஆர்.அன்பழகன் ஆகியோர் ஆஜர் ஆனார்கள். சு.கல்யாணசுந்தரம் எம்.பி மீது அ.தி.மு.க ஆட்சியில் தொடரப்பட்ட 26 பொய் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருநின்றவூரில் தண்ணீர் பந்தல் திறப்பு!

திருவள்ளூர், மே 20 –

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர தி.மு.க. சார்பில் பேருந்து நிலையம் அருகில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நகர செயலாளர் தி.வை.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், மோர், பழம் வகைகள் பல்வேறு குளிர்பானங்கள் உள்ளிட்டவை வழங்கினார்.

இதில் மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், மா.இராஜி, டி. முரளி கிருஷ்ணன், எஸ்.மூர்த்தி, இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், வே. தியாகராஜன், அன்பழகன், சி.கமலக்கண்ணன், பாபு, பெ.வினோத், எம்.மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஜூன் 3 அன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளில் நல உதவிகள்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், மே 20 -

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க., அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முக மதுசகி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் எஸ். தாமோதரன், வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், முன்னாள் எம்.எல்.ஏ., அமலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் தி.மு.க.,வின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேலூர் தொகுதி வேட்பாளர் ப.கார்த்திகேயன், அணைக்கட்டு தொகுதி வேட்பாளர் ஏ. பி.நந்தகுமார் ஆகியோருக்கு உதய சூரியன் சின்னத்திலும், குடியாத்தம் தொகுதி தே.மு.தி.க., வேட்பாளர் கே.பி. பிரதாபுக்கு முரசு சின்னத்திலும் வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும், தேர்தல் களப்பணி ஆற்றிய மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக தலைவர் ஆற்றிய உரையினை கவனத்தில் கொண்டு நாம் ஒவ்வொரு வரும், நம்மை நாமே சுய பரிசோதனைக்கு உட்படுத்தி உண்மையான உடன்பிறப்புகளாக நம்மை முன்னெடுத்து கட்சியின் தலைவர் எடுக்கும் அத்தனை முடிவுகளையும் உள்வாங்கி எதிர்கால அரசியல் களத்தை நமது அயராது உழைப்பால் கட்டமைத்து வெற்றியை நோக்கி பணி ஆற்றுவோம். தோல்வியில் இருந்து மீண்டு தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியை அமைப்போம் எனவும்,

ஜூன் 3ந் தேதி முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாட வேண்டும் எனவும்,

நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தேர்தல் களம் கண்டு வெற்றி வாகை சூடி தேர்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதன் வாயிலாக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக தேர்வு பெற்ற கட்சியின் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கும் வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவிப்பது.

அதே வேளையில் கூட்டணி தர்மத்திற்கு எதிராக சுயநலத்தோடு, அநாகரிகமாக நடந்து கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு கண்டனத்தை தெரிவிப்பது என்பன உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்மாசிலாமணி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், தயாளன் , ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளனர்.

# திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

திண்டிவனம், மே 20 –

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் திண்டி வனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமையில் நடைபெற்ற கூட்ட த்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினர்.

அப்போது அவர் பேசுகையில், நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் கழகத் தலைவர் மு. க ஸ்டாலின் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 1 கோடியே 54, லட்சத்தி 89 ஆயிரத்து 500 வாக்காளப் பெருமக்களுக்கும்

நடந்து முடிந்தத திண்டிவனம் தொகுதி சட்டமன்ற தேர்தலில்தோழமைக் கட்சி சார்பில் போட்டியிட்ட விசிக வேட்பாளர் வன்னியரசின் வெற்றிக்காக உழைத்த அனைத்து நிர்வாகிகளுக்கும்,வாக்காளர்களுக்கும் பொதுமக்களுக்கும், விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பிலும், திண்டிவனம் சட்டமன்ற தொகுதி சார்பில்மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொண்ட அவர் இந்த திராவிட முன்னேற் றக் கழகத்தை வீழ்த்த வேண்டும், அதிலும் குறிப்பாக பெரியார் இல்லை, அண்ணா இல்லை, கலைஞர் இல்லை. இந்த மூன்று பேரையும் கடந்து, ஒருங்கிணைத்து அவருடைய பலத்தை, முழு பலத்தை இங்கே தன் கையிலே வசப்படுத்திக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைகளை, லட்சியங்களை, கோட்பாடுகளை எல்லோருக்கும் எல்லாமே என்கிற அளவில் அது திட்டங்களாக எடுத்துச் செல்லுகிற ஒரு மாபெரும் சக்தியாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உருவாகி இருக்கிறார் என்ற அந்த கோபம், தாக்கம் தான் இந்த தேர்தலில் நம்மளை வீழ்த்த ஏற்பட்ட சதியின் ஒரு பகுதி. அந்த ஒரு பகுதி, இது சதியின் ஒரு பகுதி. இதில் முழுமையாக அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்களா என்றால், இல்லை. இதில் முழுமையாக நாம் தோற்கடிக்கப்பட்டு இருக்கிறோம் என்றால், இல்லை. இவன் சமம். எல்லோருக்கும் எல்லாமே சமம் என்கிற நிலையில் இன்றைக்கு வெற்றி, வெற்றியை தடுத்தது, அது தோல்வியாக கருதக்கூடிய இந்த ரெண்டு விஷயம்.

எங்களை சமமாக மதிக்க வைக்கிறது. நூறாண்டு கால உழைப்பு. எந்த சமுதாயத்தை படிக்க வைக்க வேண்டும்? எந்த சமுதாயம் வீதியிலே நடக்க அனுமதிக்க வேண்டும்? எந்த சமுதாயம் காலிலே செருப்பு போட்டு நடக்க வேண்டும்? எந்த சமுதாயம் இடுப்பிலே கட்டுகிற துண்டை தோளிலே போட்டு தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று, தாழ்த்தப்பட்ட, பிற்படு த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, இல்லாமையிலும், கல்லாமையிலும், அறியாமையிலும் இருக்கிற மக்களை இன்றைக்கு அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைத்த இந்த சமுதாயத்தை ஒரு சமுதாய சீர்திருத்தமாக இது ஒரு தேர்தலில் நிற்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல.

அதை பெற்று, அன்று முதல் இன்று வரை தமிழகத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்த காலகட்டத்திலிருந்து, இன்று வரையிலும் நூற்றுக்கணக்கான திட்டங்கள், ஆட்சி யார் இருக்கிறார்கள் என்பது இல்ல, திட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திட்டம். அண்ணாவின் திட்டம், கலைஞரின் திட்டம், ஸ்டாலினின் திட்டம் என்று இன்றைக்கு வடிவமைத்து கொடுப்பதினுடைய நோக்கம், இது புரிந்து கொள்ள முடி யாமல், இதை சற்று கூட ஏற்று கொள்ள முடியாமல், ஒன்றியத்தில் இருக்கின்ற பாஜக, பிஜேபி உடைய அவங்களுடைய தத்துவம், அவங்களுடைய லட்சியம், அவங்களுடைய கோட்பாடுகள் படிக்கக்கூடாது, தமிழன் படிக்கக்கூடாது, படிக்க விடக்கூடாது, விடவே கூடாது. அப்படிங்கிறதுதான் அவர்களின் நோக்கம்.

தமிழன் படித்தே ஆக வேண்டும், படிக்க வேண்டும், படிப்பு தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகமெங்கும் கடல்கடந்து சென்று கூட தமிழன் படிக்க வேண்டும் என்கிற நிலையை, உயர்த்தி கடல்கடந்து அயலகம் சென்று, தமிழ் மக்கள், தமிழ் பிள்ளைகள் இன்றைக்கு படிக்க வைப்பதற்காக திமுகவால் உருவாக்கப்பட்டு, உழைத்து, அந்த சட்ட திட்டங்களை வகுத்து, செயல்படுத்திய காரணத்தினால் தான் பாஜகவிற்கு இவ்வளவு கோபம் என அவர் கூறினார்.


தொடர்ந்து கழக இளைஞரணி செயலாளர் முன்னாள் துணை முதல்வர்உதயநிதி ஸ்டாலின் அவர்களை திமுக கழகத்தின் சட்டப்பேரவை கட்சி தலைவராக தேர்வு செய்து சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்ற வாய்ப்பு அளித்தகழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும், கழக பொதுச் செயலாளர்உள்ளிட்ட தலைமை கழக நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியும் தெரிவித்து தீர்மணம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொருளாளர் ரமணன்,மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், தயாளன், ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன்,துணைச் செயலாளர் கௌதமன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,அனைத்து அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# டி.எம். பார்த்தசாரதி

### மே 20 (1984)



கழக வரலாற்று நூல் ஆசிரியர். தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பிற்குரியவர்.

கழகம் தோன்றியபோது, நமது கொள்கைகளை எடுத்துக்கூற “மாலைமணி” எனும் நாளேடு கண்டவர்.

“பெரியார் அவர்களின் பகுத்தறிவு சூறாவளி பிரச்சாரப் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர், எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்! என்ற வைராக்கிய உள்ளம் படைத்தவர், களம் பலகண்டவர், பலமுறை சிறை சென்ற தியாக சீலராக விளங்கியவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்து, சிறப்புரையாற்றினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.ஜி.பிரபாகரன், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், BLA 2, BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# தேசமுத்துக்குமார்

### மே 20 (2021)



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதியாகவும், வட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அ.சோமு (எ) சோமசுந்தரம்

### மே 20 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் பணியாற்றத் தொடங்கியவர்.

புதுச்சேரி மாநிலத்தில் கிளைச் செயலாளர், தொகுதி துணைச் செயலாளர், அணியின் புதுச்சேரி மாநில துணைச் செயலாளர், செயலாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய கழகப் பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.